N/C-mail
09/12/21
12:45PM

அனுப்புநர்

சா. சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி

ந.க.எண். 019373 / எப்1 /2021 நாள்.09.12.2021

ஐயா / அம்மையீர்,

3728

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2021–2022–ஆம் கல்வியாண்டிற்கான எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணவர்களுக்கான பெயர்ப் பட்டியல் EMIS விவரங்களின் அடிப்படையில் தயாரித்தல் – மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்தல் – கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:19.11.2021.

-------

2021 – 2022 ஆம் கல்வியாண்டிற்கான எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் தொடர்பான பள்ளி மாணவர்களுக்கான பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களும் 22.11.2021 முதல் 04.12.2021 வரையிலான நாட்களில் EMIS தளத்தில் தங்கள் பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் பெயர், பிறந்த தேதி உள்ளிட்ட விவரங்களை சரிபார்த்து, திருத்தங்களை மேற்கொள்ளுமாறு பார்வையில் காணும் செயல்முறைகள் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது.

தற்போது சில பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட பணியினை மேற்கொள்வதற்கு கூடுதல் காலஅவகாசம் கோரியதால், EMIS தளத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் விவரங்களை சரிபார்த்து திருத்தங்கள் செய்யும் பணியினை மேற்கொள்ள 20.12.2021 வரை கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பணிகளை **EMIS** தளத்தில் மேற்கொள்ள இதுவே கடைசி வாய்ப்பாகும்.

..2..

எனவே, முதன்மைக் கல்வி அலுவலர்கள், தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் மேற்குறிப்பிட்ட விவரத்தினை தெரிவித்து, EMIS தளத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் பெயர், பிறந்த தேதி உள்ளிட்ட விவரங்களை சரிபார்த்து, திருத்தங்களை மேற்கொள்ளும் பணியினை **20.12.2021–க்குள்** நிறைவு செய்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்

<u>நகல்:</u>

1. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3728 /ஆ4 /2021 நாள் : 10.12.2021

பொருள் : தேர்வுகள் – வேலூர் மாவட்டம் , 2021 – 2022 – ஆம் கல்வியாண்டிற்கான எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணவர்களுக்கான பெயர்ப்பட்டியல் EMIS விவரங்களின் அடிப்படையில் தயாரித்தல் – மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் - சார்பு

பார்வை : சென்னை-6 அரசுக் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 019373/ எப்1/2021. நாள்:19.11.2021 மற்றும் நாள்:09.12.2021.

பார்வையில் காணும் கடிதப்படி. வேலூர் மாவட்டம். 2021 – 2022 – ஆம் கல்வியாண்டிற்கான எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொது தேர்வுகள் தொடர்பான பள்ளி மாணவர்களுக்கான பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு அனைத்து உயர் நிலை / மேல் நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்களும் 22.11.2021 முதல் 04.12.2021 வரையிலான நாட்களில் EMIS இணையதளத்தில் தங்கள் பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் பெயர், பிறந்த தேதி உள்ளிட்ட விவரங்களை சரிபார்த்து, திருத்தங்களை மேற்கொள்ளுமாறு பார்வையில் காணும் கடிதம் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது.

தற்போது சில பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்ட பணியினை மேற்கொள்வதற்கு கூடுதல் கால அவகாசம் கோரியதால், EMIS இணையதளத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் விவரங்களை சரிபார்த்து திருத்தங்கள் செய்யும் பணியினை மேற்கொள்ள 20.12.2021 வரை கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பணிகளை EMIS இணையதளத்தில் மேற்கொள்ள இதுவே கடைசி வாய்ப்பாகும் எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே, வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர், தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் மேற்குறிப்பிட்ட விவரத்தினை தெரிவித்து, EMIS இணையதளத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் பெயர், பிறந்த தேதி உள்ளிட்ட விவரங்களை சரிபார்த்து திருத்தங்களை மேற்கொள்ளும் பணியினை 20.12.2021-க்குள் நிறைவு செய்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :
அனைத்து வகை உயர் / மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்

மாவட்ட கல்வி அலுவலர்,
வேலூர். (தகவலுக்காகவும் தக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)